வதிவிலிருப்பவரும் ஆன ஆளொருவர், அரசியலமைப்பு தொடங்கிய திலிருந்து பத்து ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்கு இவ் வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் வெளிப்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை**

[3][**14அ.** (1) ஒவ்வொரு பிரசையும், பிரசையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்வருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு;

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு;

(இ) ஏதேனும் உள்ளூரதிகார சபை; அத்துடன்

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்.

(2) ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைப் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித் துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமைமீது இடப்படுதல் ஆகாது.

3 அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 2 ஆம் வாசகத்தினால் சேர்க்கப்பட்டது.

(3) இவ்வுறுப்புரையில் ''பிரசை'' என்பது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது.]

**அடிப்படை உரிமைகளின் மீதான மட்டுப் பாடுகள்**

**15.** (1) 13(5) ஆம், 13(6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''சட்டம்'' என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

(2) 14(1)(அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(3) 14(1)(ஆ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுக வாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(4) 14(1)(இ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும் இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதி அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(5) 14(1)(எ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதியோ அல்லது பின்வருவன தொடர்பிலோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்: அதாவது :-

(அ) ஏதேனும் உயர்தொழிலைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் முயற்சியை, வியாபாரத்தை, தொழிலை அல்லது தொழில் முயற்சியைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான உயர்தொழில்சார், தொழிநுட்பம்சார், கல்விசார், நிதிசார் தகைமைகளும் வேறு தகைமைகளும் என்பன தொடர்பிலும், அத்தகைய அப்படை உரிமைகக்கு உரித்துடைய ஆட்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடும் என்பன தொடர்பிலும் ; அத்துடன்